# உறவே நீ பேசு

புனித வளனாரின் பிரான்சிஸ்கு சபை

ஜூலை 2026 உறவு 83

TOWARDS LIBERATION IN SOLIDARITY WITH THE OPPRESSED AND THE DOWNTRODDEN
FSJ

## இந்தியாவின் திருத்தூதரே!
## எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்



FSJ செய்தி மலர்

"புனிதம் என்பது அற்புதங்களைச் செய்வதில் இல்லை
அன்றாடக் கடமைகளை அன்புடனும் விசுவாசத்துடனும்
செய்வதில்தான் உள்ளது".

ஆண்டவர் இயேசுவில் அன்பிற்கினிய சகோதரிகளே, வணக்கம்!

ஒரு சிறுவன் பள்ளிக்குச் செல்லும் வழியில் ஒரு பெரிய மரத்தைப் பார்த்தான். அதன் கீழே விழுந்திருந்த விதைகளை எடுத்துக் கொண்டு, "நானும் என் வீட்டில் இப்படிப்பட்ட ஒரு பெரிய மரத்தை வளர்க்க வேண்டும். இதற்கு என்ன செய்ய வேண்டும்?" என்று ஒரு பெரியவரிடம் கேட்டான். அதற்கு அவர், "இந்த விதையை மண்ணில் விதைக்க வேண்டும். அதற்கு நீர் ஊற்ற வேண்டும். பொறுமையாகக் காத்திருக்க வேண்டும். அது முளைத்து, செடியாகி, பின்னர் பெரிய மரமாக வளரும். அதற்குத் தேவையான முயற்சியையும், பொறுமையையும் நீ கொடுக்க வேண்டும். அப்போதுதான் அதன் முழு பலனை அனுபவிக்க முடியும்," என்றார்.

இந்த நிகழ்வு நமக்கு ஒரு முக்கியமான பாடத்தை கற்றுத் தருகிறது. வாழ்க்கையில் எந்த உயர்வையும் அடைய வேண்டுமானாலும், அதற்குரிய விலையை நாம் கொடுக்க வேண்டும். ஆசீர்வாதமான, நிறைவான, மகிழ்ச்சியான வாழ்க்கையை அனைவரும் விரும்புகிறோம். ஆனால், அதற்குத் தேவையான தியாகங்களையும் முயற்சிகளையும் செய்ய பல நேரங்களில் தயங்குகிறோம். தேவையற்ற விவாதங்களிலும், பிறருக்கு நாம் நல்லவர்கள் என்பதை நிரூபிப்பதிலும் அதிகமான நேரத்தை செலவிடுகிறோம். அவற்றை தவிர்க்க ஒரு கற்பனை கதை இதோ!



ஒரு காட்டில் ஒரு கழுதையும் புலியும் பேசிக்கொண்டே நடந்தன. வழியில், பச்சைப் பசேல் என்ற புல்வெளியைப் பார்த்த கழுதை, "ஆஹா, இந்த புல் எவ்வளவு நீல நிறத்தில் அழகாக இருக்கிறது!" என்றது. புல் பச்சை நிறத்தில் இருக்கும் போது, கழுதை அதை நீலம் என்று கூறியதால் புலிக்கு அதிர்ச்சியாக இருந்தது. புலி, "என்ன உளறுகிறாய், புல் பச்சை நிறத்தில் அல்லவா இருக்கிறது" என்று வாதாடியது. கழுதையும் விடாமல், புல் நீலம் தான்! என்று அடித்துச் சொன்னது. இந்த விவாதம் பெரிதாகி, வாக்குவாதம் நீண்டது.

இறுதியில், யாருக்குத் தீர்ப்பு சொல்வது என்று தெரியாமல் காட்டின் ராஜாவான சிங்கத்திடம் சென்றார்கள். சிங்கத்தின் சிம்மாசனத்தை நெருங்கிய கழுதை, "அரசே, புல்லின் நிறம் நீலம் தானே, அதை இந்த புலி ஏற்றுக்கொள்ள மறுக்கிறது, இதற்கு தண்டனை கொடுங்கள்!" என்றது. நிலைமையைப் புரிந்து கொண்ட புத்திசாலியான சிங்கம், "ஆம் கழுதையே, புல் நீல நிறம் தான்!" என்று தீர்ப்பளித்தது.

கழுதை மிகவும் மகிழ்ச்சியடைந்து, "புலி என்னை எதிர்த்துப் பேசியதால் அதற்கு தண்டனை கொடுங்கள்" என்று கேட்டது. சிங்கம் புலிக்கு "ஐந்து ஆண்டுகள் மௌன தண்டனை" விதித்தது. கழுதை பெருமையுடன் துள்ளி குதித்து அங்கிருந்து சென்றது. பிறகு, தண்டனையை ஏற்ற புலி சிங்கத்திடம் சென்று, "அரசே, புல் பச்சை நிறம் என்று உங்களுக்கு நன்றாகத் தெரிந்தும் ஏன் எனக்கு தண்டனை கொடுத்தீர்கள்?" என்று வருத்தத்துடன் கேட்டது. அதற்கு சிங்கம், "ஆம், புல் பச்சை நிறத்தில்தான் இருக்கிறது. ஆனால், புல் என்ன நிறம் என்று தெளிவாகத் தெரிந்த ஒரு புலியாகிய நீ, அறிவற்ற கழுதையுடன் நிறத்தைப் பற்றி விவாதம் செய்து உன்னுடைய நேரத்தை வீணடித்தாய். அந்த கழுதையை விட முட்டாள் தனமாக நடந்து கொண்டதால் தான் உனக்கு அந்தத் தண்டனை" என்றது.

உண்மையைப் புரிந்து கொள்ள ஆர்வமில்லாத முட்டாள்களுடன் விவாதிப்பதில் எந்தப் பயனும் இல்லை. வீண் விவாதங்களைத் தவிர்த்து அமைதியாக விலகிச் செல்வதே உண்மையான புத்திசாலித்தனம். குடும்ப வாழ்வில் விவாதத்தை தவிர்த்து விலகி செல்வதும் அவரவர் நிலையை அப்படியே ஏற்று வாழ்வதும் தான் இன்றைய அவசிய தேவையாக இருக்கிறது.

இறைவார்த்தை, நிறைவான வாழ்வைப் பெற நாம் கொடுக்க வேண்டிய மூன்று முக்கியமான விலைகளை நமக்குக் கற்றுத் தருகிறது.

**1. பழைய பாவ வாழ்வை விட்டுவிட வேண்டும்:-**

உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் புனித பவுல் கூறுகிறார்: திருமுழுக்கின் வழியாக நாம் புதிய வாழ்வைப் பெற்றிருக்கிறோம். எனவே பழைய பாவ இயல்பை விட்டுவிட்டு, புதிய மனிதராக வாழ வேண்டும். நாம் கிறிஸ்தவர்களாக இருந்தாலும், பழைய குணங்களையும் பாவப் பழக்கங்களையும் பிடித்துக் கொண்டே இருந்தால், கிறிஸ்துவின் நிறைவான வாழ்வை அனுபவிக்க முடியாது. எனவே, சீடத்துவ வாழ்க்கையின் முதல் விலை பாவ வாழ்வை விட்டு விலகுவது.

**2. சுயநல வட்டத்தைத் தாண்டி பிறரை நேசிக்க வேண்டும்:-**

நற்செய்தியில் இயேசு கூறுகிறார்: “தந்தையையோ, தாயையோ என்னைவிட அதிகமாக நேசிப்பவர் எனக்குத் தகுதியற்றவர்.” இதன் பொருள், பெற்றோரை நேசிக்கக் கூடாது என்பதல்ல. நம்முடைய அன்பு குடும்பத்தைத் தாண்டி ஏழைகள், எளியவர்கள், கைவிடப்பட்டவர்கள், துன்புறுபவர்கள் அனைவரையும் சென்றடைய வேண்டும் என்பதே ஆகும். நம்முடைய குடும்பத் தேவைகளை மட்டுமே சிந்திக்காமல், பிறரின் தேவைகளையும் உணர்ந்து உதவும்போது, கிறிஸ்துவை முதன்மைப்படுத்தும் வாழ்க்கையை நாம் வாழ்கிறோம்.

**3. நமக்குக் கொடுக்கப்பட்ட கடமைகளை அர்ப்பணிப்புடன் நிறைவேற்ற வேண்டும்:-**

இயேசு கூறுகிறார்: “தன் சிலுவையைச் சுமந்து கொண்டு என்னைப் பின்பற்றாதவர் எனக்குத் தகுதியற்றவர்.” சிலுவை என்பது நமக்குக் கொடுக்கப்பட்ட வாழ்க்கைப் பொறுப்புகளையும், கடமைகளையும் குறிக்கிறது. வியட்நாம் நாட்டின் கர்தினால் பிரான்சிஸ் சேவியர் அவர்கள், சிறையில் இருந்த போதும், “புனிதம் என்பது அற்புதங்களைச் செய்வதில் இல்லை அன்றாடக் கடமைகளை அன்புடனும் விசுவாசத்துடனும் செய்வதில்தான் உள்ளது” என்று எழுதினார். ஒரு தொழிலாளி தனது வேலையை நேர்மையாகச் செய்வதும், ஒரு ஆசிரியர் தனது பணியை அர்ப்பணிப்புடன் செய்வதும், ஒரு பெற்றோர் தனது குடும்பப் பொறுப்பை உண்மையுடன் நிறைவேற்றுவதும், ஒரு குரு தனது இறைப்பணியை விசுவாசத்துடன் செய்வதும் ஒரு துறவி தனது அர்ப்பண வாழ்வை நிறை மகிழ்ச்சியுடன் வாழ்வதும் இவை அனைத்தும் புனித வாழ்விற்கான பாதைகளே.

**இறைவன் நிச்சயமாக வெகுமதி அளிப்பார்:-**

திருவிவிலியத்தில் சூனேம் பெண், இறைவாக்கினர் எலிசாவுக்கு அன்போடு விருந்தோம்பல் செய்ததைப் பார்க்கிறோம். அதற்காக இறைவன் அவருக்கு ஆசீர்வாதம் வழங்கினார். அதேபோல் நற்செய்தியில் இயேசு கூறுகிறார்: “என் சீடருக்கு ஒரு கிண்ணம் குளிர்ந்த நீராவது கொடுப்பவர் தம் கைமாறைப் பெறாமல் போகமாட்டார்.” அன்போடு செய்யப்படும் சிறிய செயல்களைக்கூட இறைவன் மறப்பதில்லை.

அன்பானவர்களே, இன்று இறைவன் நம்மை மூன்று வழிகளில் அழைக்கிறார்: பழைய பாவ வாழ்வை விட்டு புதிய வாழ்வை வாழ்வோம். நம்முடைய சுயநல வட்டத்தைத் தாண்டி பிறரை அன்போடு சேவிப்போம். நமக்குக் கொடுக்கப்பட்ட அன்றாடக் கடமைகளை அர்ப்பணிப்பு உணர்வோடு நிறைவேற்றுவோம்.

இந்த ”விலைகளை” மகிழ்ச்சியுடன் கொடுக்கும்போது, கிறிஸ்து நமக்கு நிறைவான வாழ்வையும், ஆசீர்வாதங்களையும், நிலையான வெகுமதியையும் நிச்சயமாக வழங்குவார்.

என்றும் பிரான்சீசிய உறவில்
சகோ. **எம். ஆரோக்கியம்** வ.பி.ச.
சபைத் தலைமைச்சகோதரி

SUPERIOR GENERAL
FRANCISCAN SISTERS
OF ST. JOSEPH

FSJ Generalate, Bishop John Aelen Illam, Magazine Road, St. Thomas Mount, Chennai - 600 016. Tamilnadu.
Phone : 2231 2876, 2234 1510 E-mail : fsjaelen1887@gmail.com

# SUPERIOR GENERAL PROGRAMME

## JULY 2026

| | | |
|---|---|---|
| 03.07.2026 - 12.07.2026 | - | Annual Retreat - Batch 1 |
| 13.07.2026 - 15.07.2026 | - | Thuraiyur Land Registration |
| 17.07.2026 - 26.07.2026 | - | Annual Retreat Batch 2 |
| 26.07.2026 | - | Senior Sisters Day (Joachim & Anna Feast) |
| 29.07.2026 - 07.08.2026 | - | Annual Retreat - Batch 3 |

# FROM THE GENERALATE

## JUNE 2026

**08.06.206 - 09.06.2026:** A meeting was held at the Generalate with Rev. Fr. James Anthuvan regarding the sainthood process of our Founder, Archbishop John Aelen. The meeting was attended by Mother General Sr. M. Arockiam, Postulator Sr. Margaret, Vice Postulator, Sr. Jayanthi and General Secretary Sr. Shaila. The meeting focussed on discussing the progress of the cause and the necessary steps to be taken in advancing the process.

**13.06.2026:** The India Team of the Thomas Foundation for Microcredits organized a one-day seminar for 45 students receiving educational assistance. Rev. Sr. M. Arockiam and Dr. Irudaya Raj inspired the students through sessions on purposeful living, career guidance, and the responsible use of social media. The programme concluded with the distribution of educational loans by Mother General, Rev. Sr. M. Arockiam. Rev. Sr. P. Arulmary, the Thomas Foundation Co-ordinator, together with her team of sisters, meticulously planned and organized the programme.

**Sr. Shaila FSJ**
General Secretary

# ST. JOSEPH'S PROVINCE

FSJ Provincialate, Assisi Bhavan, Uthamanallur Village,
Acharapakkam - 603 301. Kanchipuram Dist.

## PROVINCIAL SUPERIOR PROGRAMME

### JULY 2026

| | | |
|---|---|---|
| 01.07.2026 | - | Bishop John Aelen Home, Pudupet - Visit |
| 03.07.2026 - 12.07.2026 | - | Province Admin Work |
| 13.07.2026 | - | Walajabad - Visit |
| 15.07.2026 | - | St.Joseph's Hospital Blessing - Kamalapuram |
| 16.07.2026 - 26.07.2026 | - | Province Admin Work |
| 27.07.2026 | - | Our Lady of Lourdes Convent Cheyyar Visit |
| 28.07.2026 - 31.07.2026 | - | Province Admin Work |

BISHOP JOHN AELEN PROVINCE
FSJ Provincialate, 63/1, 2nd Street, Alpha Nagar, Karumandapam, Trichy - 620 001.
Mobile: 94861 59689 / E-mail: tryprofsj@yahoo.com

# PROVINCIAL SUPERIOR PROGRAMME

## JULY 2026

| | | |
|---|---|---|
| 01.07.2026 | - | Meeting the Bishop of Thanjavur |
| 03.07.2026 | - | Meeting the Archbishop of Madurai |
| 04.07.2026 | - | Assisi Illam - Nellai Town (Meeting the Parish Priest) |
| 06.07.2026 - 08.07.2026 | - | Documents Verification of convents and Institutions |
| 09.07.2027 | - | Assisi Illam, Manakal (Meeting the Parish Priest) |
| 10.07.2026 | - | Nirmala College, Coimbatore |
| 11.07.2026 | - | Province Council Meeting |
| 13.07.2026 | - | St. Theresa's Primary School - Dindigul |
| 15.07.2026 | - | Assisi Illam - Okkur Visitation |
| 18.07.2026 | - | Assisi Illam, Srivaikundam - Visitation |
| 19.07.2026 | - | Francis of Assisi Convent - Thuraiyur Visitation |
| 22.07.2026 - 25.07.2026 | - | Convent Documents Verification |
| 26.07.2026 - 31.07.2026 | - | Desk Work - FSJ Provincialate, Trichy |

# ST. FRANCIS OF ASSISI PROVINCE

FSJ Provincialate, Assisi Bhavan, Dharera P.O. Etmadpur, Agra Dt - 283 202. U.P.
Phone: 073516 78464 / Email: provincialatefsj@gmail.com


## PROVINCIAL SUPERIOR PROGRAMME

### JULY 2026

| | | |
|---|---|---|
| 01.07.2026 - 03.07.2026 | - | Gangapurcity (Renovation Work) |
| 05.07.2025 - 06.07.2026 | - | Kaskanj Convent Visit |
| 10.07.2026 | - | Sambal Convents Visit |
| 11.07.2026 | - | Kanth Convent Visit |
| 12.07.2026 | - | Thakurdwara Visit |
| 13.07.2026 | - | Bishop's Meeting with the School Managers, Principals and the Provincial. |
| 15.07.2026 - 16.07.2026 | - | Travelling to Chennai |
| 17.07.2026 - 29.07.2026 | - | Annual Retreat - Generalate. |
| 30.07.2026 | - | Travelling to Agra |

ST. MARY'S VICE-PROVINCE
Portiuncula Convent, No.5, D.R.R.Street, Avadi, Chennai – 600 054.
Mobile No: +91 81224 02357 | E Mail: fsjstmarysprovince@gmail.com

# VICE-PROVINCIAL SUPERIOR PROGRAMME

## JULY 2026

| | | |
|---|---|---|
| 01.07.2026 | - | Visiting the sick sisters at St. Thomas Hospital |
| 06.07.2026 | - | Sembarambakkam - Visit |
| 16.07.2026 - 26.07.2026 | - | Retreat at Generalate |

*Message of the Holy Father Leo XIV*

# FOR THE SIXTH WORLD DAY FOR GRANDPARENTS AND THE ELDERLY



Dear brothers and sisters,

Through the prophet Isaiah, the Lord promises that he will never forget any of us. He assures us that he has engraved our faces on the palms of his hands (cf. Is 49:16) and that his love is greater than a mother's love for her child (cf. Is 49:15). The prophet gives us a glimpse of an intimate and intense dialogue in which God addresses, in familiar terms, each person individually and the people as a whole. Even today, we can read these words as referring to each of us, and everyone can hear that "I will never forget you" spoken directly to them.

These are words that fill us with comfort and hope. They are the answer to an agonizing feeling that troubles the heart: "The Lord has forsaken me; my Lord has forgotten me" (Is 49:14). How often in Sacred Scripture, especially in the Psalms, does prayer spring from the despair of those who feel that their lives are of no interest to anyone and are being neglected! The painful feeling of being forgotten is, unfortunately, shared by many people, and among them are quite a few elderly people.

God's love, which forgets no one, offers itself as an act of justice and a response to the anonymity in which human life all too often ends up lost. The lives of many elderly people, in particular, seem to be covered by a veil that blurs the features of their faces and shrouds them in oblivion. This is what happens in homes where loneliness reigns and also in those care facilities where each person's uniqueness risks being reduced to a bed number or an illness.

The celebration of the World Day of Grandparents and the Elderly is an opportunity to rediscover that the Church is called to be a mother to all and that at any age it is always possible to recognize ourselves as sons and daughters of God. May this day, therefore, be an inspiration for everyone, especially the young, to revive the beautiful custom of visiting their grandparents, the elderly members of the family and even those who have no one to visit them. Bring them, through this message and your presence, the closeness and affection of the Pope. Ensure that the words of the prophet, "But I will never forget you," take the form of a tender and affectionate encounter. "In an era that favors speed and fragmentation, the human person still yearns to receive care and recognition from attentive minds, kind words and hands capable of tenderness. The digital culture multiplies connections and offers new opportunities for interaction; yet, the human heart retains an irrevocable need for genuine closeness" (Encyclical Letter, Magnifica Humanitas, 239).

The Church understands the suffering of her elderly members; she knows full well that they are all too often viewed through the lens of stereotypes and considered a burden; she is aware that a profit-driven economy weakens family ties; she knows that many elderly people are left behind by children who are forced to migrate or, in some cases, to fight in wars. For each of these reasons, she joyfully proclaims the Lord's promise: "But I will never forget you!"

It is a joy, at any age, but especially when we are no longer young, to discover, as John Paul I said, that we are the recipients "of undying love on the part of God. We know: he has always his eyes open on us, even when it seems to be dark. He is our

father; even more he is our mother" (Angelus, 10 September 1978). Even if it does not come naturally to think this way, the truth is that even in old age we do not cease to be sons and daughters; therefore, the invitation to return to the arms of God  whose love is both paternal and maternal remains worthwhile at any age.

For many, the discovery of God's tenderness takes place over the course of their lives, sometimes even in its final stages. Indeed, unlike in the past, it is increasingly common to reach old age without having had a genuine experience of faith. In such cases, old age beginning with the questions that arise with greater urgency during this season of life can become the right time to begin or resume a spiritual life. On this new journey, one can recognize that God, as Saint Augustine says, "is a mother because he cherishes, because he nourishes, because he nurses, because he protects" (Commentary on Psalm 27, II, 18). It is an awareness that helps us not to feel ashamed of the fragility that emerges and also to understand that we are always in need of one another and in need of attention and care. To God, who draws near to us and whom we learn to recognize in his tenderness, we can now turn with filial trust in prayer. It is never too late to begin turning to him. It can be a great gift for everyone.

Dear elderly men and women, Pope Francis spoke of you as a "new people" (Catechesis, 23 February 2022), since the number of older adults has never been so large in human history. It is, therefore, more important than ever to reflect with you, this "new people," on what our vocation might be when fragility the human person's companion from birth seems to take over. I would like to say to you: do not be afraid of fragility! It is precisely this weakness that holds within itself a new potential that also illuminates the other stages of life. Indeed, when "we acknowledge our fragility, our hearts become open to supporting one another and to invoking the One who can grant what no human power can ensure: the profound reconciliation of hearts and, with it, true peace" (Meeting with the Algerian community, Basilica of Our Lady of Africa, Algiers, 13 April 2026).

This is how we can live out our old age as Christians: "fragile" yet at the same time "called." A man and a woman can, in fact, be born anew in old age (cf. Jn 3:4-6) and exclaim, with the prophet: "In returning and rest you shall be saved; in quietness and in trust shall be your strength" (Is 30:15). This strength can become an invitation not to resort to the ways of arrogance and power to ensure human coexistence, but to the ways of reconciliation and true peace. In this time, so harshly marked by the violence of war and social unrest, many wonder what the world in which their grandchildren will grow up will be like. I urge you, dear friends, to join me in praying earnestly that peace may soon come to the whole world.

Dear elderly brothers and sisters, I thank you for supporting me every day with your prayers, especially when you recite the Holy Rosary. I return this gratitude from the bottom of my heart and leave you with this prayer: may the Lord always renew us in faith, hope and love He who never forgets us!



# Pope Leo


*JULY 2026*

Monthly Intention

**FOR RESPECT FOR HUMAN LIFE**

*Let us pray for the respect and protection of human life in all its stages, recognizing it as a gift from God.*

# FORMATION COMMISSION



A. 10.06.2026: Eighteen candidates joined our congregation wholeheartedly, with great enthusiasm and a willing spirit. Sr. Ubha coordinated the candidates from Odisha. She was warmly welcomed and honored at the Novitiate by Sr. Christurani and the sisters.




B. 19.06.2026: The Solemnity of the Most Sacred Heart of Jesus was celebrated devoutly by our novices and aspirants. This celebration helped them deepen their devotion to the Sacred Heart of Jesus and grow in their spiritual life.



C. 12.06.2026: A solemn Holy Eucharistic Mass in honor of the Sacred Heart of Jesus was celebrated at the Sacred Heart Seminary. Our novices and sisters actively and joyfully participated in the Holy Mass and the fellowship meal that followed. The gathering strengthened their sense of fellowship and provided moments of joy and togetherness.



D. 15.06.2026 – 20.06.2026: A Liturgy Class was organized for the first-year novices and was conducted by Fr. Arulraj. Through his guidance, the novices gained a deeper understanding of the Eucharistic celebration and its significance in their spiritual formation.



E. 18.06.2026: Various extracurricular activities were organized to help the novices enrich themselves. They engaged in article writing, reading books, and learning new hymns, enabling them to participate more actively and meaningfully in the Holy Eucharist.



F. 21.06.2026: Six of our aspirants received the Sacrament of Confirmation at St. John the Baptist Church. This Spirit-filled celebration was a significant milestone in their preparation for religious life and strengthened their commitment to their vocation.



G. 24.06.2026: Sr. Fatima and Sr. Agnes Santhiyagu visited the aspirants to encourage them in discerning and deepening their vocation. They offered valuable spiritual guidance and support, helping the aspirants grow stronger in faith and commitment to their religious calling.

Sr. **Christhu Rani**, **FSJ**
Formation Commission Co-ordinator

# VOCATION COMMISSION

"Ask the Lord of the harvest, therefore, to send out workers into His harvest field." (Matthew 9:38)



With grateful hearts, we thank and praise God for blessing our FSJ Congregation with young girls who have generously responded to His divine call. Our FSJ Congregation's Aspirants for the year 2026–2027 joined during the first week of June.

We sincerely appreciate and thank each and every one of our dear FSJ Sisters for your powerful prayers, loving concern, and constant spiritual support offered for the growth of vocations in our Congregation.

Our heartfelt gratitude goes to all the Province Vocation Coordinators, Commission Members, Superiors, Headmistresses, Sisters serving in various ministries, and all those who took keen interest in guiding, motivating, and accompanying these young girls towards religious vocation.

Because of your tireless efforts, sacrifices, loving encouragement, and continuous prayers, today our Congregation is blessed with these aspirants.

We express our special gratitude to our beloved Rev. Sr. Superior General, Rev. Sr. General Councillor for Vocation Commission, Rev. Sr. General Councillor for Communication Commission, Rev. Sr. General Economer, and all our Provincials for your inspiring words, valuable guidance, generous financial support, and constant encouragement towards the vocation ministry.

By the grace of God and through your wholehearted support, we are able to continue this beautiful mission of vocation promotion fruitfully and meaningfully.

Let us remain united in prayer, so that the Lord may continue to bless our Congregation with many more holy and committed vocations in the years to come.

May God abundantly bless all our mission centres, communities, institutions, and vocation ministry.

**Sr. Christhu Rani, FSJ**
Vocation Commission Co-ordinator

# EVANGELIZATION COMMISSION



சகோதரிகள் கடந்த ஓராண்டு காலமாக மரியியல் (Mariology) பாடத்தை இணைய வழியாக படித்து சான்றிதழ் பெற்றுள்ளார்கள். அனைத்து சகோதரிகளுக்கும் பாராட்டுகளும், வாழ்த்துக்களும்.

**Sr. Christhu Rani, FSJ**
Evangelization Commission Co-ordinator

# EDUCATION COMMISSION

On June 5, 2026, World Environment Day was celebrated in all the Bishop John Aelen Province schools under the theme "Inspired by Nature: For Climate, For Our Future." The celebration aimed to create awareness about protecting the environment and promoting a clean and green campus. Students actively participated by taking an oath to protect nature and planting tree saplings in the school premises. The programme inspired students, staff, and parents to understand the importance of caring for the environment and working together for a better and sustainable future.








Rev. Sr. **Susai Mary, FSJ**
General Councilor, Education Co-Ordinator

# HEALTH COMMISSION

## 1. Blood Donation Day



A. Blood Donation Day was observed at North Province FH College of Nursing. Students were motivated and encouraged to donate blood. A total of 16 students and teachers generously donated blood. This was a great achievement and a proud moment for the college.

---

**2. உலக இரத்தான விழிப்புணர்வு**

உலக இரத்ததான நாளை முன்னிட்டு, புனித தோமையார் மருத்துவமனை சார்பாக மூன்று இடங்களில் ரத்ததான முகாம்கள் சிறப்பாக நடத்தப்பட்டன.

10.06.2026 - Global School of Aviation
12.06.2026 - புனித தோமையார் மருத்துவமனை
22.06.2026 - நசரேத்துப்புரம்



இந்த மூன்று இடங்களிலும் நடைபெற்ற ரத்ததான முகாம்களில் 100–க்கும் மேற்பட்டோர் ஆர்வமுடன் பங்கேற்று, உயிர்களைக் காக்கும் உன்னத நோக்கில் தங்களின் இரத்தத்தை தானமாக வழங்கினர்.

இந்நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து, ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்கிய புனித தோமையார் இரத்த வங்கி (St. Thomas Blood Bank) மற்றும் அருள் சகோதரிகள் அனைவருக்கும் எங்களின் இதயம் கனிந்த நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

"இரத்த தானம்! உயிர் தானம்."
தானம் செய்வோம்!! உயிர்களைக் காப்போம்!!!

---

**3. உலக போதை ஒழிப்புதினம்**

உலக போதை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு, வீரலூரில் அமைந்துள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு போதைப்பொருட்களின் தீமைகள் மற்றும் அவற்றிலிருந்து விலகி ஆரோக்கியமான வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.





இந்நிகழ்வில் அருட்சகோதரி. லியோ ஜோஸ்பின் அவர்கள் மாணவர்களிடம் போதைப் பொருட்களின் உடல், மன மற்றும் சமூக பாதிப்புகளை விளக்கி, நல்ல பழக்க வழக்கங்களை வளர்த்துக் கொண்டு போதையற்ற சமுதாயத்தை உருவாக்க அனைவரும் உறுதியேற்க வேண்டும் என்று விழிப்புணர்வு உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சி மாணவர்களிடையே பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தியதுடன், போதைப் பொருட்களுக்கு எதிரான சமூகப் பொறுப்புணர்வையும் வலுப்படுத்தியது.

---

### 4. உலக உடற்பயிற்சி தினம்: 21.06.2026



உலக உடற்பயிற்சி தினத்தை முன்னிட்டு, St. Francis of Assisi Province ஜூனியர் அருட் சகோதரிகளுக்கு உடற்பயிற்சியின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. உடலை ஆரோக்கியமாகவும், மனதை உற்சாகமாகவும் வைத்திருக்க தினசரி உடற்பயிற்சி அவசியம் என்பதையும், ஒழுங்கான வாழ்க்கைமுறையின் ஒரு பகுதியாக அதை கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, யோகா பயிற்சிகளும் வழங்கப்பட்டு, பல்வேறு ஆசனங்கள் மற்றும் மூச்சுப் பயிற்சிகள் மூலம் உடல் நலம், மன அமைதி மற்றும் ஒருமுகப்படுத்தும் திறன் மேம்படும் விதம் விளக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்த அருட்சகோதரி. ஜெயம் மேரி அவர்களுக்கு எங்களின் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

---

### 5. HPV (Human Papillomavirus) தடுப்பூசி விழிப்புணர்வு முகாம்:

22.06.2026 அன்று, புனித தோமையார் மருத்துவமனையில் HPV (Human Papillomavirus) தடுப்பூசி குறித்த விழிப்புணர்வு முகாம் சிறப்பாக நடைபெற்றது. கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் உள்ளிட்ட HPV வைரஸால் ஏற்படும் நோய்களைத் தடுப்பதில் தடுப்பூசியின் முக்கியத்துவத்தை மக்களிடையே எடுத்துரைக்கும் நோக்கில் இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் மருத்துவமனையின் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பிற பணியாளர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

இந்நிகழ்ச்சியை சிறப்பாக வழிநடத்திய HPV தடுப்பூசி நிறுவனத்திற்கும், இத்தடுப்பூசியை ரோட்டரி கிளப் மூலமாக பொதுமக்களுக்கு குறைந்த விலையில் வழங்க ஒத்துழைப்பு அளித்த அனைவருக்கும் எங்களின் இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

"விழிப்புணர்வே பாதுகாப்பின் முதல் படி HPV தடுப்பூசியால் ஆரோக்கியமான எதிர்காலத்தை உருவாக்குவோம்."



**Dr. Sr. Mary Jenova, FSJ**
Health Commission Co-ordinator

# COMMUNICATION COMMISSION

05.06.2026 அன்று உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு செய்யாறு சப்–கலெக்டர் செல்வி அம்பிகா ஜெயின் வந்தவாசி வட்டாட்சியர், பிருதூர் கிராம நிர்வாக அலுவலர் திருவாளர் பன்னீர்செல்வம், கற்க கசடற அமைப்பின் நிறுவனர் டாக்டர் பாஸ்கரன், திருவாளர் மலர் சாதிக் மற்றும் பல சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டு விருதூர் முதியோர் இல்லத்தில் மரம் நடும் விழா நடைபெற்றது வந்திருந்த அனைவருக்கும் முதியோர் இல்ல பொறுப்பாளர் சகோதரி ரெக்ஸ்லின் மைக்கேல் அவர்கள் நல்லாடை அணிவித்து அனைவரையும் வரவேற்றார்கள் சப்–கலெக்டர் செல்வி அம்பிகா ஜெய் அவர்கள் சுற்றுப்புற சூழல் மிகவும் தூய்மையாக இருப்பதாகவும் அதனை தொடர்ந்து பேணி பாதுகாக்கும் படி கேட்டுக் கொண்டார்கள் இந்த கால சுழற்சி மாறுதல் மற்றும் மழையின்மை தண்ணீர் இன்மை போன்றவை எதனால் நடைபெறுகிறது அதனை எவ்வாறு நாம் மேற்கொள்ள போகின்றோம் என்பது பற்றி எல்லாம் பேசினார்கள். அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.




**Dr. Sr. Mary Jenova, FSJ**
Communication Commission Co-ordinator

# சமூக பணிக்குழு

## A. விதவைபெண்களுகான கடன் உதவி:



08.06.2026 அன்று ஐந்து விதவைப் பெண்களுக்கு சுய தொழில் செய்வதற்காக ரூபாய் ஒரு லட்சம் வட்டியில்லா கடனாக கொடுக்கப்பட்டன. இப்பெண்கள் தூய தோமையார் மலை சென்னை சார்ந்தவர்கள் இக்கடன் உதவியானது சிறுதொழில் செய்ய உதவியாக அமைந்துள்ளன.

## B. விதவைப் பெண்களுக்கான கூடுகை:



12.06.2026 அன்று தூய தோமையார் மலை சென்னை சார்ந்த 50 கத்தோலிக்க விதவைப் பெண்களுக்கு ஆற்றுப்படுத்துதல் பெற்றுக் கொள்வதன் நன்மைகளை பற்றியும் அதனால் எத்தகைய பணிகளை நாம் அடையலாம் என்பதை பற்றியும் அருள் சகோதரி அருள் மேரி அவர்கள் கூறி ரூபாய் ஆயிரம் மதிப்புள்ள மளிகை பொருட்களை கொடுக்கப்பட்டன மேலும் தூய மரியன்னை பற்றியும் கூறப்பட்டன இதனால் இவர்கள் சமுதாயம், பொருளாதாரம், ஆன்மீகம் போன்றவற்றில் வளர்ந்து வருகிறார்கள்.

## C. சிறைப்பணி




20.06.2026 அன்று செங்கல்பட்டு அரசு சிறார் சிறப்பு பள்ளி சந்திக்கப்பட்டன இதில் 60 சிறார்கள் பல தவறுகள் செய்து சிறையை பிடிக்கப்பட்டுள்ளன. இதில் பெற்றோரை தொடர்பு கொள்ள முடியாத நிலையில் இருக்கும் நபர்களை பெற்றோரை தொடர்பு கொண்டு சிறார்கள் மனநிலை பற்றி பேசி சிறார்கள் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டன. மேலும் கல்வி ஆண்டு தொடங்கிய நிலையில் அவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் கொடுக்கப்பட்டன. இந்த சந்திப்பில் 9 சிறார்களை ஆற்றுப்படுத்தப்பட்டன. மேலும் கல்வியின் முக்கியத்துவம் பற்றி பேசப்பட்டன.

---

## D. குழந்தை தொழிலாளர் ஒழிப்பு தினம்

14. 06.2026 அன்று வந்தவாசி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் சமூக நலத்துறை கற்க கசடற அமைப்பு புனித வளனார் முதியோர் இல்ல பொறுப்பாளர் சகோதரி ரெக்ஸ்லின் மைக்கேல் அனைவரும் இணைந்து குழந்தை தொழிலாளர் ஒழிப்பு தின விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது. தலைமை ஆசிரியர் உமா மகேஸ்வரி அனைவரையும் வரவேற்று மகிழ்ந்தார்கள். குழந்தைகள் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள், குழந்தை தொழிலாளர் முறையானது முற்றிலுமாக ஒழிக்கப்பட்டுள்ளதா, அதற்கான குழந்தைகளின் செயல்பாடுகள் என்னென்ன, எவ்வாறு குழந்தை தொழிலாளர்கள் இல்லாத நிலையை உருவாக்குவது, இன்றைய மாணவ மாணவியர்களின் நிலைப்பாடு என்ன எதை நோக்கி அவர்கள் பயணித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பது பற்றிய விழிப்புணர்வு கருத்தினை சகோதரி அவர்கள் வழங்கினார்கள். அனைத்து குழந்தைகளுக்கும் எழுதுகோல் வழங்கப்பட்டது.





---


## E. முதியோர்களுக்கான விழிப்புணர்வு முகாம்

15.06.2026 அன்று முதியோர்களுக்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தின விழிப்புணர்வு நிகழ்ச்சி புனித வளனார் முதியோர் இல்லம் பிருதூரில் வந்தவாசி சார்பு நீதிபதி திருமதி சரண்யா பங்கேற்று சிறப்புரை ஆற்றினார்கள் முதியோர்களின் தேவைகளை கேட்டறிந்தார்கள் சகோதரி ரெக்ஸ் லின் அவர்கள் அனைத்து முதியோர்களுக்கும் ஒய்வு ஊதிய தொகை கிடைக்கவும் அதற்கான ஏற்பாடுகளை செய்து தரும்படியாகவும் இல்லம் தேடி மருத்துவ வசதி ஏற்பாடு செய்து தரவும் சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பு தரும்படியாகவும் குப்பைகளை முதியோர் இல்லத்திற்கு அருகில் கொட்டாமல் இருக்க வேண்டும் என்றும் கோரிக்கைகளை விண்ணப்பித்தார்கள் நீதிபதி அவர்களும் அதனை ஏற்றுக்கொண்டு 15 பேருக்கு முதியோர் ஓய்வூதியம் கண்டிப்பாக பெற்று தருவதாக வாக்களித்து சென்றார்கள் அதற்கான தயாரிப்புகள் நடந்து கொண்டிருக்கின்றது.






## F. இலவச மருத்துவ முகாம்









17.06.2026 அன்று மருத்துவர் சரண்யா மற்றும் அவரது குழுவினர் விருதூர் முதியோர் இல்லம் வந்து மருத்துவ உதவிகள், மருத்துவ பரிசோதனைகள் அனைத்து முதியோர்களுக்கும், பணியாளர்களுக்கும் சிறப்பாக செய்து கொடுத்தார்கள். ஏற்பாடு செய்த நீதிபதி திருமதி. சரண்யா அவர்களுக்கும் அவரது குழுவினர்களுக்கும் எங்களுடைய இல்லத்தின் சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். மாதாமாதம் நிச்சயமாக இந்த இல்லம் தேடி மருத்துவம் நாங்கள் தொடர்ந்து உங்கள் இல்லத்திற்கு வந்து செய்து தருகின்றோம் என்று வாக்குறுதி கொடுத்து சென்றிருக்கின்றார்கள்.

## G. யோகதினம்





12.06.2026 அன்று பிருதூர் முதியோர் இல்லத்தில் உலக யோகா தினத்தை முன்னிட்டு மருத்துவர் முகமது அர்க்கம் மற்றும் அவரது குழுவினர் வந்து முதியோர்களுக்கு யோகா பயிற்சிகளையும் அதனுடைய நன்மைகளையும் விளக்கி கூறினார்கள். அனைவருக்கும் மருந்து மற்றும் எண்ணெய் போன்ற பொருள்கள் வழங்கி சென்றார்கள்.

**Sr. Arul Mary**
*Social Work Commission, Co-ordinator*

# PROJECT COMMISSION

The India Team of the Thomas Foundation for Microcredits organized a one-day seminar for 45 college students receiving educational assistance. The programme was graced by Rev. Sr. M. Arockiam, Superior General, Sr. P.S. Celia, General Economer, the Microcredit Team and Dr. Irudaya Raj, Through interactive sessions, Dr. Irudaya Raj guided the students on making wise career choices, exploring employment opportunities, and using social media responsibly. Mother General inspired the participants to live purposeful lives, shared the history of the Foundation, and assured them that the FSJ Congregation is their extended family. The seminar fostered motivation and strengthened bonds with the students, concluding with the distribution of educational loans by Mother General.







**Dr. Sr. Arul Mary, FSJ**
Project Commission Co-ordinator

# WOMEN'S AND FEMALE CHILDREN COMMISSION

A. இன்று திருச்சி மாநிலம் பெரம்பலூர் புனித தோமினிக் பெண்கள் விடுதியில் புதிய அறைகள் சபை தலைமை அன்னையின் ஆலோசனை படியும் சபை பொருளர் சகோதரி அவர்களின் உதவியாலும் கட்டப்பட்டு பெரம்பலூர் வட்டார முதன்மை அருட்தந்தை சுவக்கின் அடிகளார் அவர்களால் திருப்பலி நிறைவேற்றப்பட்டு மாநில தலைமை சகோதரி மா. வேளாங்கண்ணி ஷெரின் அவர்களால் கட்டிடமானது திறந்து வைக்கப்பட்டது. விழாவிற்கு அனைத்து ஏற்பாடுகளையும் டோமினிக் இல்ல தலைமை சகோதரியும் விடுதி காப்பகத்தின் நிர்வாகி சகோதரி ரெஜி விடுதிப் பொறுப்பாளர் சகோதரி விமலாராணி உதவி பொறுப்பாளர் சகோதரி தங்கம் மற்றும் அவ்வில்லத்தின் அனைத்து அருட்சகோதரிகளுக்கும் பாராட்டுகளும் வாழ்த்துக்களும் இவ்விழாவில் மாநில தலைமை சகோதரியுடன் ஆலோசகர் சகோதரி. செல்வா அவர்களும், செயலர் சகோதரி கரோலின் கலந்து கொண்டார்கள்.








B. At St. Antony's Home for Children, Vepery, We joyfully celebrated the Feast of St. Antony with a special Holy Mass. The celebration brought together the children, staff, sisters and well-wishers in prayer and thanksgiving. It was a blessed occasion filled with faith, unity, and happiness as we honored our patron saint and sought his intercession for all the children and families associated with our home.







**Dr. Sr. Arul Mary, FSJ**
Women's And Female Children Commission Co-ordinator



# புனித தோமையார் – பிறப்பு முதல் இறப்பு வரை கவிதை
## நாள்: 03.07.2026

கலிலேயா மண்ணிலே
பிறந்த பாக்கியவனே,
கடவுளின் திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவரே
தீதிமு (இரட்டையர்) என
அழைக்கப்பட்ட தோமையரே,

திருத்தூதர் குழுவில் இடம் பெற்ற
பெருமையாளரே.
கலிலேயக் கடற்கரையில் வாழ்ந்த
எளிய மனிதராய்,
கர்த்தர் இயேசுவின் அழைப்பை
ஏற்று சென்றீரே;

“என்னைப் பின்பற்றிவா” என்ற
இறை அழைப்பினிலே,
எல்லாவற்றையும் துறந்து
சீடராய் மாறினீரே.

லாசருவை எழுப்பச் சென்ற
இயேசுவை நோக்கி,
“நாமும் சென்று அவரோடு
சாகலாம்” என்றீரே;
(யோவான் 11:16) என்ற வசனம் இன்று வரை,
உமது அன்பும் துணிவும்
உலகிற்கு எடுத்துக்காட்டே.

இறுதி இராவுணவின்
நேரத்தில் ஆண்டவரிடம்,
“வழி எங்களுக்குத் தெரியாதே”
என்று கேட்டீரே;

அதற்கு இயேசு அன்புடன் பதிலளித்தார்:
“நானே வழியும் உண்மையும் வாழ்வும்
ஆவேன்.” (யோவான் 14:5–6)

சிலுவைப் பாடுகள் கண்டு
மனம் கலங்கினீரே,
உயிர்த்த ஆண்டவரைக் காணாது
சந்தேகித்தீரே;

“காயங்களைத் தொட்டாலன்றி
நம்பமாட்டேன்” என்றீர்,
உண்மையைத் தேடிய நேர்மையான
உள்ளமுடையீரே.

எட்டு நாட்கள் கழித்து
இயேசு தோன்றியபோது,
காயங்களை காட்டி உம்மை
அன்போடு அழைத்தாரே;

அந்த நொடியிலே விழுந்து
வணங்கி உரைத்தீர்:
“என் ஆண்டவரே! என் தேவனே!” (யோவான் 20:28)

“காணாமல் நம்புகிறோர் பேறுபெற்றோர்”
என்ற, கர்த்தரின் வார்த்தை உலகின்
செல்வமானதே;
(யோவான் 20:29) என்ற இறைமொழியாலே,
விசுவாச வாழ்வின் ஒளி
மேலும் பிரகாசித்ததே.
பெந்தெகொஸ்தே நாளில்
தூய ஆவி பெற்றீரே,

புதிய உற்சாகத்துடன்
நற்செய்தி அறிவித்தீரே;
பார்தியா, மீதியா, பாரசீகம் தாண்டி வந்து,

முழுபாரத மண்ணிலும்
கிறிஸ்துவை விதைத்தீரே.
கி.பி. 52–ஆம் ஆண்டில் இந்தியா வந்தீரே,

கேரளக் கரையில் நற்செய்தி விதைத்தீரே;
ஏழரை திருச்சபைகளை நிறுவி வளர்த்தீரே,
ஆயிரம் இதயங்களில்
இறைநம்பிக்கை ஏற்றினீரே.

மயிலாப்பூர் மண்ணிலே
இறைப்பணி தொடர்ந்தீரே,
மக்கள் பலரையும் ஆண்டவரிடம் சேர்த்தீரே

உமது போதனை கண்டு பொறாமை
கொண்டவர்கள்,
உமக்கு எதிராக சதிகள் பல செய்தார்களே.

சிறிய மலையொன்றில்
ஜெபத்தில் இருந்தபோது,
ஈட்டியால் குத்தி உம்மை கொன்றார்களே

கி.பி. 72–இல் இரத்த சாட்சியாய் மறைந்தீரே,
கிறிஸ்துவுக்காக உயிரையே அர்ப்பணித்தீரே.

மயிலாப்பூரில் உறங்கும் உமது திருவுடல்,
மக்களின் விசுவாசத்திற்கு ஊற்றாக
இருக்கிறது;

உமது வாழ்வும் தியாகமும் இன்று வரை,
திருச்சபையின் பொக்கிஷமாய் விளங்குகிறது.

சந்தேகத்திலிருந்து விசுவாசம்
வரை நடந்தீரே,
சோதனையிலிருந்து சாட்சியாய் உயர்ந்தீரே;



இந்தியாவின் திருத்தூதரே,
புனித தோமையாரே,
எங்கள் நம்பிக்கையை
உறுதிப்படுத்த வேண்டுகிறோம்.

“என் ஆண்டவரும் என் தேவனும்”
என்ற உம் அறிக்கை,
எங்கள் இதயத்தின் நித்திய ஜெபமாகட்டும்;

இறைவனின் பாதையில்
நிலைத்திருக்க அருள் தந்து,
விண்ணக மகிமையில் எம்மையும் சேர்த்திடும்.
ஆமென்..

**Sr. V. Roseline Mary**
Italy - Roncello

## கார்மேல் அன்னை

## 16.07.2026





**Sr. Josephlne Precilla**
St. Joseph's Convent
Gorakhpur

கார்மேல் அன்னையே, கருணையின் தாயே,
கார்மேல் மலையின் குளிர்ந்த தென்றலே!
விண்ணக மகிமை சூடிய அன்னையே,
விடியலாய் வந்திடும் நம்பிக்கையே!

துயரத்தின் பாதையில் தளர்ந்திடும் வேளையில்,
துணிவூட்டி கைகோர் க்கும் தாயே நீ!
கண்ணீரின் மொழியை அறிந்திடும் அன்னையே,
கனிவோடு அணைத்திடும் அன்பே நீ!

இருள் சூழ்ந்த வாழ்வில் ஒளியாய் மலர்ந்து,
இயேசுவின் பாதையில் எம்மை நடத்தி!
தவறிடும் நேரத்தில் தேற்றிடும் தாயே,
தாழ்மையின் வழியில் எம்மை வளர்பாயே!

கார்மேல் மலரின் மணம்போல் இனிமை தந்து,
கருணைக் கடலாய் அருள் பொழிந்து!
உன் திருவடியில் சரணடைந்த பிள்ளைகள் நாங்கள்
உன் பாதுகாப்பில் நிம்மதி காண்கிறோம்!

காயம் பெற்ற இதயங்களுக்கு ஆறுதலாய் இரு,
கலங்கும் குடும்பங்களுக்கு சமாதானமாய் இரு!
நம்பிக்கை தேடும் உயிர்களுக்கு நட்சத்திரமாய் இரு,
நல்வழி காட்டும் ஒளிவிளக்காய் இரு!

அன்னையே மரியே, எங்கள் ஜெபம் கேளாய்,
அன்போடு எம்மை என்றும் காத்தருளாய்!
உன் மகனாகிய இயேசுவிடம் எங்களுக்காக வேண்டி,
இறையருளின் பாதையில் நிலைநிறுத்துவாயாக!

கார்மேல் அன்னையே, எங்கள் வாழ்வின் நம்பிக்கையே,
என்றென்றும் எங்களை அரவணைத்து காத்தருள்வாயாக!



# தேசிய மருத்துவர்கள் தினம்

## நாள்: 01.07.2026

இந்தியாவில் ஆண்டுதோறும் ஜூலை 1 அன்று தேசிய மருத்துவர்கள் தினம் கொண்டாடப்படுகிறது புகழ் பெற்ற மருத்துவர் மற்றும் மேற்கு வங்கத்தின் முன்னால் முதலமைச்சருமான டாக்டர் பிதான் சந்திரராயின் பிறந்தநாள் மற்றும் நினைவு தினத்தை போற்றும் வகையில் 1991 ஆம் ஆண்டு முதல் இந்த நாள் அதிகாரப்பூர்வமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது டாக்டர் பி.சி.ராய் இந்தியாவின் தலைசிறந்த மருத்துவர்களின் ஒருவரான இவர் சுகாதாரம் மற்றும் பொது மருத்துவ துறையில் பல புதிய மாற்றங்களை உருவாக்கினார் மகாத்மா காந்தியின் தனிப்பட்ட மருத்துவராகவும் பணியாற்றியுள்ளார் நோக்கம்

மனித குலத்தின் நலனுக்காக 24 மணி நேரமும் அயராது உழைக்கும் மருத்துவர்களின் சேவைக்கு நன்றி தெரிவிக்கும் விதமாகவும் அவர்களின் தியாகத்தை கௌரவிக்கும் நோக்கிலும் இந்நாள் கொண்டாடப்படுகிறது.

மருத்துவர்கள் கொண்டாடப்பட வேண்டிய காரணங்கள்:

1. உயிரைக் காக்கும் கவசங்கள்
2. அயராத உழைப்பு
3. மன தைரியம்
4. இன்றைய நாளில் மட்டுமல்ல குணமாக்கும் ஒவ்வொரு நோயாளியும் அந்த மருத்துவரை கடவுளாக தன் மனதில் வைத்து ஒவ்வொரு நாளும் கொண்டாடுகிறார்கள்.
5. தொலைதூர ரோபோடிக் அறுவை சிகிச்சை சாதனை, நுண் அறிவு AI சாதனை, புற்றுநோய் சிகிச்சையில் முன்னேற்றம்.

**இன்றைய சூழலில் மருத்துவர்கள்**

அதிவேக தொழில்நுட்ப வளர்ச்சி நிர்வாக சுமைகள் மற்றும் பணி சுமை ஆகியவற்றிற்கு இடையே போராடி மனிதர்களின் உயிரை காக்கும் மகத்தான சேவையை செய்து வருகின்றனர்.

இவர்கள் நவீன மருத்துவ முறைகளை கற்றுக் கொள்வதோடு நோயாளிகளுடன் அனுதாபமாகவும் தொடர்பு கொள்ள வேண்டிய சவாலான காலகட்டத்தில் பணியாற்றுகின்றனர்.

செயற்கை நுண்ணறிவு, டெலிமெடிசின் போன்ற புதிய தொழில்நுட்பங்களை மருத்துவர்கள் வேகமாக தழுவி வருகின்றனர். இது சிகிச்சையை எளிதாக்கினாலும் புதிய தொழில்நுட்பங்களை கற்க கூடுதல் நேரத்தில் செலவிட வேண்டி உள்ளது.

"மருத்துவக்கலை எங்கு நேசிக்கப்படுகிறது
அங்கு மனித நேயமும் நேசிக்கப்படுகிறது"

விடியலைத் தேடும் விழிகளில் – ஒரு
விடியலாய் வந்திடும் மருத்துவனே
வலியினைப் போக்கும் மருந்தினில் – உன்
அன்பினை தந்திடும் மாமனிதனே
கண்கள் உறங்கா இரவுகளில் – உன்
கைகள் செய்யும் மாயங்கள்
மண்ணில் மனிதர் வாழவே – நீ
தன்னலம் துறக்கும் தியாகங்கள்
நோய்களை வெல்லும் போரினில் – நீ
புன்னகை காக்கும் படைவீரன்
தாயினும் மேலாய் அரவணைக்கும் – இந்தப்
புவியில் நீயொரு உயிர்ச்சாரல்
கல்லறை செல்லும் உயிரையும் – உன்
வல்லமையால் மீட்டுத் தருபவலே!
உன் சேவைக்கு ஈடேதுமில்லை – இந்த
வையத்தில் உன்னைப் போல் தெய்வமும் இல்லை



**Sr. Alangara Mary Merlyn**
St. Mary's Convent - Avadi

# மீட்பின் வரலாற்றை மலர வைத்த புனித வேர்கள்
## நாள்: 26.07.2026

### முன்னுரை

உலக வரலாற்றில் பல புகழ்பெற்றவர்களாக வாழ்ந்துள்ளனர் ஆனால் இறைவனின் மீட்பு திட்டத்தில் அமைதியாகவும், ஆழமாகவும் பங்காற்றி இறைவனுக்கு புகழ் சேர்த்தவர்கள் புனித அன்னாள் புனித சுவைக்கின் அவர்கள் இவர்கள் அன்னை மரியாவின் பெற்றோர்கள் ஆவர் திரு விவிலியத்தில் இவர்கள் இடம்பெறவில்லை என்றாலும் மீட்பரின் தாயாகிய அன்னை மரியாவின் பெற்றோர் என சிறப்புற்று திகழ்கிறார்கள் புனிதர்களான அன்னாள் சுவர்க்கின் இவர்களின் புனித பாதையை நோக்கி நாம் பயணிக்க எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனின் அன்பில் வேர் ஊன்ற பின்வரும் நிகழ்வுகள் நமக்கு உதவும்

### இறைவன் மீது அசைக்க முடியாத நம்பிக்கை

புனித அன்னாள் புனித சுவைக்கின் இவர்கள் இருவரும் இறைவன் மீது ஆழமான நம்பிக்கை கொண்டு வாழ்ந்தவர்கள் எல்லா நிலையிலும் இறைவனைப் பற்றிக் கொண்டவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட சோதனைகளையும் துன்பங்களையும் இறைவன் மீது கொண்ட நம்பிக்கையால் முறியடித்தவர்கள் இவர்களின் வாழ்க்கை ஆபிரகாம் சாரால் தம்பதியரின் விசுவாசத்தை நினைவு படுத்துகிறது கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை என்று நம்பி வாழ்ந்தனர் இவர்களுக்கு நீண்ட காலமாக குழந்தை இல்லாத நிலையிலும் மனம் தளராமல் இறைவன் மீது கொண்ட நம்பிக்கையில் உறுதியாய் இருந்தனர் நிச்சயம் இறைவன் குழந்தை பேரு தருவார் என்று பொறுமையுடன் காத்திருந்தனர் காத்திருப்பது கடினம் என்றாலும் கலங்காமல் நின்று இறைவனின் நேரம் வரும் என்று இதயத்தில் நம்பி வாழ்ந்திருந்தனர் பொறுமை என்பது இறைவனின் செயல்பாட்டை நம்பி காத்திருக்கும் ஆன்மீக வலிமையாகும் இவர்களின் ஆன்மீக வலிமைக்கும் நம்பிக்கைக்கும் நற்கணியாக இறைவன் அன்னை மரியாவை மகளாக கொடுத்து ஆசீர்வதித்தார் மீட்பராம் இயேசுவே உலகிற்கு அளித்த தாயே பெற்றெடுத்த பெரும் பாக்கியத்தை பெற்றவர்கள் இவர்கள் நம்பினோரை இறைவன் ஒருபோதும் கைவிடுவதில்லை

### இடைவிடாத ஜெப வாழ்வு

புனித அண்ணா புனித சுவைக்கின் இவர்கள் இறைவனிடமிருந்து அன்னை மரியாவை வரமாய் பெற்றெடுத்த பின்பு இறைவனுக்கு நன்றி செலுத்தி மகிழ்ந்தார்கள் எல்லா சூழ்நிலையிலும் நன்றி கூறுங்கள் (1தெச 5:18) என்ற இறை வார்த்தைக்கு ஏற்ப இவர்கள் உள்ளம் நன்றியால் நனைந்தது இவர்களின் ஜெபம் வேண்டுதலோடு முடிவடையவில்லை நன்றி உணர்வில் திளைத்தது புனிதர்களான இவர்கள் தங்கள் இல்லத்தை இறைபக்தி நிறைந்த இல்லமாக உருவாக்கினார்கள் அத்தகைய சூழலில் தான் அன்னை மரியா வளர்ந்தார் ஜெபிக்கும் பெற்றோர்கள் ஜெபிக்கும் பிள்ளைகளை உருவாக்குகிறார்கள் என்பதை இவர்களின் வாழ்க்கை எடுத்துக்காட்டுகிறது மண்டியிட்டு ஜெபித்த உங்கள் இதயம் மகிமையின் வாசலை திறந்தது மௌனத்தில் பேசிய உங்கள் நம்பிக்கை மரியாவின் வாழ்வில் மலர்ந்தது இடைவிடாத ஜெபித்த நீங்கள் இறைவனின் அருளை சுமந்தீர்கள் உலகின் மீட்பு திட்டத்தில் உங்கள் வாழ்வை அர்ப்பணித்தீர்கள்.

### அன்னை மரியாவின் வளர்ப்பில் இவர்களின் பங்கு

ஐயம் என்று ஆண்டவனை நம்பி ஆசீர்வாதமாய் அன்னை மரியாவை பெற்று எளிமையில் இறை மகிமையை காணவும் ஈகை குணத்தால் இறைவனை மகிழ்விக்கவும் கற்றுக் கொடுத்தார்கள் சிறப்பாக இறை பக்தியில் வளர்த்தனர் ஜெப வாழ்க்கையால் அன்னை மரியாவே உருவாக்கின இறைவனின் திருஉலத்திற்கு கீழ்ப்படிய கற்றுக் கொடுத்தனர் தூய்மையான வாழ்வாள் வழிநடத்தினர் இத்தகைய புண்ணியங்களால் அன்னை மரியாவை அழகுப்படுத்தி ஆண்டவர் விருப்பம் போல் வளர்த்தார்கள்.

### கிறிஸ்துவ குடும்பங்களுக்கு முன்மாதிரி

1. ஜெபம் குடும்ப வாழ்க்கையின் மையமாக இருக்க வேண்டும் சோதனைகள் துன்பங்கள் வந்தாலும் நம்பிக்கையை பொறுமையை இழக்கக்கூடாது.
2. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை இறை நெறியில் வளர்க்க வேண்டும்
3. ஒரு குடும்பம் இறைவனின் அன்பில் வாழும் போது அது அன்பு இல்லமாக இறைவன் வாழும் இல்லமாக மாறுகிறது குடும்பங்களில் வாழும் ஒவ்வொருவருக்கும் புனிதர்களான அந்நாளும் சுவர்க்கேனும் முன்மாதிரியாக திகழ்கிறார்கள்.
4. திரு அவை புனித அன்னாலையும் புனித சுவைக்கினையும் பெற்றோர்கள் தாத்தா பாட்டிகள் மற்றும் முதியோரின் பாதுகாவலராக போற்றுகிறது இவர்களின் தூய வாழ்வு குடும்ப உறவுகளின் முக்கியத்துவத்தையும் தலைமுறைகளுக்கிடையே ஆன அன்பையும் நினைவூட்டுகின்றன.

### நிறைவுறை

புனித அந்நாளும் புனித சுவைக்கினும் ஒரு சாதாரண தம்பதியர் அல்ல மாறாக இறைவனின் திருவலத்திற்கு பணிந்து தூய வாழ்வு வாழ்ந்து புனிதத்தை நோக்கி பயணிக்க உதவி வந்தவர்கள் இவர்களின் வாழ்க்கை நமக்கு ஜெபத்தின் மகிமை பொறுமையின் வலிமை குடும்பத்தின் புனிதம் ஆகியவற்றை நினைவூட்டுகிறது இவர்களைப் போன்று இறைவனை நம்பி வாழும் குடும்பங்கள் உண்மையான ஆசீர்வாதமான குடும்பங்களாக திகழும்

“அன்னாளே அன்புத் தாயே
அருளின் பாதை காட்டிடுவாய்
சுவக்கீமே நீதியின் தந்தையை
ஜெபத்தின் வழி நடந்திடுவாய்
மரியாளின் பெற்றோரே
மகிமை நிறைந்த புனிதரே
எங்கள் குடும்பம் இறைவனில் வளர
என்றும் எங்களுக்காக மன்றாடும்.”



**Sr. Anne Irudhaya Mary**
Assisi Bhavan
Chebrolu

# தலைமை ஆசிரியையும், அருட்சகோதரியுமான எனது பார்வையில் "கல்வி"

### கல்வி – மனிதனை முழுமைப்படுத்தும் தெய்வீகப் பயணம்

கல்வி என்பது வெறும் பாடப்புத்தக அறிவை வழங்கும் கருவி மட்டுமல்ல. அது மனிதனை முழுமையான ஆளுமையாக மாற்றும் ஒரு புனிதப் பயணமாகும். ஒரு பள்ளியின் தலைமை ஆசிரியையாகவும், அருட்சகோதரியாகவும் பணியாற்றும் எனது பார்வையில், கல்வி என்பது அறிவை வளர்ப்பதோடு மட்டுமல்லாமல், அன்பு, ஒழுக்கம், இரக்கம், சகிப்புத்தன்மை, பொறுப்பு மற்றும் இறைநம்பிக்கை போன்ற உயர்ந்த மனித மாண்புகளையும் மாணவர்களின் வாழ்வில் வேரூன்றச் செய்யும் ஒரு தெய்வீகப் பணியாகும்.

இன்றைய உலகம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் வேகமாக முன்னேறிவருகிறது. இந்த முன்னேற்றம் மாணவர்களுக்கு எண்ணற்ற வாய்ப்புகளை உருவாக்குகிறது. ஆனால் அதே நேரத்தில், மனிதநேயம், நற்பண்புகள் மற்றும் சமூகப் பொறுப்பு போன்றவற்றின் முக்கியத்துவத்தையும் நாம் மறந்துவிடக்கூடாது. எனவே, கல்வி என்பது அறிவைப் பெறுவதற்கான ஒரு வழி மட்டுமல்ல; நல்ல மனிதர்களை உருவாக்கும் ஒரு வாழ்க்கைப் பயிற்சியாகவும் இருக்க வேண்டும்.

ஒரு ஆசிரியர் பாடங்களை மட்டும் கற்பிப்பவர் அல்லர். அவர் மாணவர்களின் எதிர்காலத்தை வடிவமைக்கும் சிற்பி. அதேபோல், ஒரு பள்ளி என்பது கட்டிடங்களின் தொகுப்பு அல்ல; அது கனவுகள் நினைவாகும் இடம், திறமைகள் மலரும் தோட்டம், மனிதநேய மதிப்புகள் வளர்க்கப்படும் பேராலயம் ஆகும். ஒவ்வொரு குழந்தையும் தனித்திறமையுடன் படைக்கப்பட்டவர்கள் என்பதை உணர்ந்து, அவர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதே கல்வியின் உன்னதமான நோக்கமாகும்.

அருட்சகோதரியாக நான் நம்புவது என்னவெனில், கல்வி மனிதனின் மனதையும் இதயத்தையும் ஒருசேர வளர்க்க வேண்டும். அறிவு மட்டுமே இருந்தால் அது முழுமையான வளர்ச்சியல்ல; அன்பு, சேவை மனப்பான்மை மற்றும் இறைபக்தி இணைந்தால்தான் கல்வி தனது உண்மையான அர்த்தத்தை அடைகிறது. மாணவர்கள் உயர்ந்த பதவிகளை அடைவதோடு மட்டுமல்லாமல், சமூகத்திற்கு ஒளியாகவும், பிறருக்குச் சேவை புரிபவர்களாகவும் வளர வேண்டும்.

இன்றைய பெற்றோர்களும் ஆசிரியர்களும் இணைந்து செயல்படுவது மிகவும் அவசியம். குடும்பமும் பள்ளியும் ஒருங்கிணைந்து செயல்படும் போது மட்டுமே மாணவர்களின் முழுமையான வளர்ச்சி சாத்தியமாகும். குழந்தைகளுக்கு மதிப்பெண்களை மட்டுமல்ல, வாழ்க்கை மதிப்புகளையும் கற்பிப்பது நமது கடமையாகும்.

எனவே, கல்வி என்பது வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான சாதனம் மட்டுமல்ல; அது மனிதனை உயர்ந்த சிந்தனையுடையவராகவும், நற்குடிமகனாகவும், இறையருள் நிறைந்த மனிதராகவும் மாற்றும் வல்லமை கொண்டது. நமது கல்வி நிலையங்கள் தெய்வீக அன்பையும், அறிவிச்சுடரையும், சேவைமனப்பான்மையும் மாணவர்களின் வாழ்வில் விதைக்க வேண்டும்.

"கல்வி என்பது அறிவை நிரப்புவது அல்ல; மனிதநேயத்தையும் இறை அன்பையும் வளர்த்து, உலகை மாற்றக்கூடிய நல்ல மனிதரை உருவாக்குவதே அதன் உயர்ந்த நோக்கமாகும்."

### கல்வி – மனிதகுலத்தை மாற்றும் வல்லமை

இன்றைய உலகம் வேகமாக மாறிக்கொண்டிருக்கிறது. செயற்கை நுண்ணறிவு, அறிவியல் முன்னேற்றங்கள், உலகமயமாக்கல் போன்றவை புதிய வாய்ப்புகளையும்

சவால்களையும் உருவாக்குகின்றன. இத்தகைய சூழலில், மாணவர்கள் புத்தக அறிவில் மட்டும் சிறந்து விளங்குவது போதாது. அவர்கள் மனிதநேயம், ஒழுக்கம், தலைமைத்துவம், படைப்பாற்றல், சமூகப் பொறுப்பு மற்றும் ஆன்மீக விழுமியங்களிலும் வளர்த்தெடுக்கவேண்டும். இதுவே, உன்னதமான கல்வி.

ஒரு பள்ளி என்பது தேர்வு முடிவுகளை உருவாக்கும் இடம் மட்டுமல்ல. அது நல்ல மனிதர்களை உருவாக்கும் புனித ஆலயம். இங்கே மாணவர்கள் அறிவைப் பெறுவதோடு, அன்பு, ஒற்றுமை, பகிர்வு, கருணை மற்றும் சேவை மனப்பான்மை போன்ற வாழ்க்கை மதிப்புகளையும் கற்றுக்கொள்கிறார்கள். எனது கல்வித் தத்துவத்தில், ஒவ்வொரு குழந்தையும் மதிப்புமிக்கவர்; ஒவ்வொரு குழந்தைக்கும் கற்றுக்கொள்ளும் உரிமையும், வளர்ச்சி பெறும் வாய்ப்பும் இருக்க வேண்டும்.

ஆசிரியர்கள் கல்வியின் உயிர்நாடியாக இருக்கின்றனர். ஒரு சிறந்த ஆசிரியர் பாடங்களை கற்பிப்பதோடு நிற்காமல், மாணவர்களின் வாழ்க்கையைத் நன்கு அறிந்து பேசுபவராக இருக்க வேண்டும். அவர் ஒரு சிறந்த வழிகாட்டி, ஊக்கமளிப்பவர், நம்பிக்கையை விதைப்பவர். மாணவர்களின் வெற்றியின் பின்னால் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பும் அன்பும் மறைந்திருக்கும்.

பெற்றோர்களின் பங்களிப்பும் கல்வியில் மிக முக்கியமானது. ஒரு குழந்தையின் முதல் ஆசிரியர்கள் பெற்றோர்களே பள்ளியும் குடும்பமும் இணைந்து செயல்படும் போது மட்டுமே குழந்தையின் முழுமையான வளர்ச்சி சாத்தியமாகும். மதிப்பெண்கள் மட்டுமல்ல, வாழ்க்கை மதிப்புகளும் குழந்தைகளுக்கு கற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.

அருட்சகோதரியாக நான் நம்புவது என்னவெனில், கல்வி மனிதனை இறைவனுக்கு நெருக்கமாக அழைத்துச் செல்ல வேண்டும். அறிவு மனிதனை உயர்த்தும்; ஆனால் அன்பும் நம்பிக்கையும் அந்த அறிவிற்கு அர்த்தம் கொடுக்கும். கல்வி மனிதர்களை போட்டியிடுபவர்–களாக மட்டும் அல்லாமல், பிறருக்குச் சேவை செய்பவர்களாகவும் மாற்ற வேண்டும்.

இறுதியாக, கல்வி என்பது ஒரு தொழில் வாய்ப்புக்கான கருவி அல்ல; அது மனித வாழ்க்கையை மாற்றும் சக்தி. அது இருளை அகற்றி ஒளியை வழங்குகிறது; அறியாமையைநீக்கி ஞானத்தை வளர்க்கிறது; சுயநலத்தை அகற்றி சேவை மனப்பான்மையை உருவாக்குகிறது. எனவே, கல்வி என்பது ஒரு பயணம் அல்ல; அது மனிதனை முழுமைப்படுத்தும் ஒரு வாழ்வியல் விழுமியங்களாகும்.

**கல்வியை நான் எவ்வாறு பார்க்கிறேன்?**

கல்வித்துறையில் பணியாற்றுவதில் எனக்கு அளவில்லாத அன்பும் ஆர்வமும் உள்ளது. மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பள்ளியில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களையும் நான் நேசிக்கிறேன். ஆசிரியர் பணி எனக்கு ஒரு வேலை அல்ல; அது ஒரு சேவை. ஒவ்வொரு மாணவரின் வாழ்க்கையிலும் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும் வாய்ப்பாக அதை நான் கருதுகிறேன்.

ஒவ்வொரு மாணவரும் தனித்துவமான திறமைகளைக் கொண்டவர்கள் என்று நான் நம்புகிறேன். அந்த திறமைகளை கண்டறிந்து வளர்ப்பதே ஒரு கல்வியாளரின் கடமையாகும். எனவே, மாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் பாதுகாப்பான, மகிழ்ச்சியான மற்றும் ஊக்கமளிக்கும் கற்றல் சூழலை உருவாக்க விரும்புகிறேன். மாணவர்களின் வெற்றியை நான் எப்போதும் பாராட்டுகிறேன். அவர்களின் சாதனைகள் பள்ளியின் பெருமையாகும்.

மாணவர்களின் சிறிய முயற்சிகளையும் அங்கீகரித்து பாராட்டுவது அவர்களை மேலும் உயர்வுகளுக்குத் தூண்டுகிறது என்று நான் நம்புகிறேன்.

ஆசிரியர்களின் வளர்ச்சிக்கும் நலனுக்கும் நான் எப்போதும் துணை நிற்பேன். ஆசிரியர்களே கல்வியின் முதுகெலும்பு. அவர்களுக்கு தேவையான ஆதரவும் ஊக்கமும் வழங்கப்பட்டால், அவர்கள் மாணவர்களை சிறப்பாக வழிநடத்த முடியும். அதேபோல், பள்ளியின் அனைத்துப் பணியாளர்களின் சேவையையும் மகிழ்ந்து பாராட்டுகிறேன்.

எனது கல்விக் கொள்கையின் முக்கிய நோக்கம் மாணவர்களின் முழுமையான வளர்ச்சியாகும். கல்வி என்பது புத்தக அறிவுடன் மட்டுப்படக்கூடாது. நல்லொழுக்கம், ஒழுக்கம், தலைமைத்துவம், படைப்பாற்றல், சமூகப் பொறுப்பு, தொடர்புத்திறன் மற்றும் மனிதநேயம் ஆகியவற்றையும் வளர்க்க வேண்டும். திறன் மேம்பாட்டிற்கு நான் அதிக முக்கியத்துவம் வழங்குவதில் பெருமையடைகிறேன்.

இன்றைய உலகில் மாணவர்கள் சிந்தனைத் திறன், பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன், குழு ஒத்துழைப்பு, புதுமை மற்றும் தொழில்நுட்பத் திறன்களை வளர்த்துக்கொள்ள வேண்டும். இத்திறன்கள் அவர்களை எதிர்காலத்திற்கு தயார்படுத்தும். கையெழுத்து மேம்பாட்டிலும் நான் கவனம் செலுத்துகிறேன். அழகான கையெழுத்து மாணவர்களின் ஒழுக்கம், கவனம் மற்றும் பொறுமையை வெளிப்படுத்துகிறது. எனவே மாணவர்கள் தங்கள் கையெழுத்து திறனை தொடர்ந்து மேம்படுத்த வேண்டும் என்று ஊக்குவிக்கிறேன்.

ஒழுக்கமும் கீழ்ப்படிதலும் மாணவர்களின் வாழ்க்கையில் மிக முக்கியமானவை. பள்ளியின் விதிமுறைகளையும் ஒழுங்குகளையும் மாணவர்கள் மதித்து பின்பற்ற வேண்டும். இது அவர்களின் தனிப்பட்ட வளர்ச்சிக்கும் எதிர்கால வெற்றிக்கும் அடித்தளமாக அமையும்.

எனது இறுதி இலக்கு, மாணவர்களை படைப்பாற்றல் மிக்க, பொறுப்புணர்வு கொண்ட, சமூக அக்கறையுள்ள நல்ல குடிமக்களாக உருவாக்குவதாகும். அவர்கள் உயர்ந்த இலக்குகளை நோக்கி பயணித்து, தங்களின் திறமைகளை சமூக நலனுக்காக பயன்படுத்த வேண்டும்.

ஒரு கல்வியாளராக, மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களின் முன்னேற்றத்திற்காக தொடர்ந்து பாடுபடுவேன். அனைவரும் இணைந்து செயல்பட்டால், ஒவ்வொரு மாணவரும் தங்களின் சிறந்த வடிவத்தை அடையக்கூடிய ஒளிமயமான கல்விச் சூழலை உருவாக்க முடியும்.

கல்வி என்பது எதிர்காலத்தை உருவாக்கும் விலைமதிப்பற்ற செல்வம்.



**Sr. Maria Selvi Rathna**
St. Joseph's Convent
Maraimalai Nagar

சபை செழிப்பாக வளர்ந்ததில் பெருமிதம் கொள்கிறேன்.
ஞான காரியத்தில் இன்னும் வளர ஜெபிக்கிறேன்.
91- வது வயதில் என்னுடைய ஆசீர்.

Sr. Mary Bertha
Quasquicentennial

69 வருடமாக என்னை வளர்த்த சபையை
என் வாழ்வின் பெரும் சொத்தாக நினைத்து
கடவுளுக்கு நன்றி கூறி மகிழ்கிறேன்.

Sr. Mary Hycintha
St. Mary's Convent - Avadi

சபை எல்லா துறைகளிலும் வளர்ந்திருப்பதை
நினைத்து பூரிப்படைகிறேன்
என்னுடைய 79-வது வயதில் மனநிறைவோடு வாழ்கிறேன்.

Sr. Mary Bencia
St. Louis Convent - St. Thomas Mount

உடல் நலக்குறைவு இருந்தாலும் கடவுள் என்னுடன் இருந்து
ஒவ்வொரு நொடிப்பொழுதும் என்னை
வழி நடத்துவதை உணர்கிறேன். மன மகிழ்வோடு இருக்கிறேன்.

Sr. Mary Flora
St. Thomas Hospital

கடவுள் மனிதரின் காவியம் என்ற புத்தகத்தை படித்துக் கொண்டிருக்கின்ற
இந்த நாட்களில் இயேசுவின் அன்பில் இன்னும் ஆழமாக
மூலிகை ஆனந்தம் கொள்கிறேன் சபைக்காக ஜெபிக்கிறேன்.

Sr. Mary Nirmala
Manampathy Kandigai

உண்மையிலும் நேர்மையிலும் இயேசுவோடு இணைந்து மகிழ்வோடு
எனது 92 வது வயதில் பயணிக்கிறேன்.
ஒரு துறவி என்பதில் ஆனந்தம் கொள்கிறேன்.

Sr. Mary Eucharista
Quasquicentennial

# அருட்சகோதரி. மரிய டெல்கி லில்லி அவர்களின் விண்ணக பயணம்



**பிறப்பு: 25.12.1950** **இறப்பு: 28.06.2026**

நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை நிறைவு செய்தேன். விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்.

இறைவன் மனிதனுக்கு அளித்த அரிய கொடை வாழ்வு. அந்த வாழ்வை முழமையாக இறைவனுக்கும். அவரது மக்களுக்கும் அர்ப்பணித்து, அன்பு, பணிவு, இறைப்பற்று, தன்னலமற்ற சேவை ஆகிய நற்பண்புகளின் வழியாக எண்ணற்ற உள்ளங்களில் முத்திரை பதித்தவர் அருட்சகோதரி மரிய டெல்கி லில்லி (வபிச)

கோட்டாறு மறைமாவட்டத்தில் குமார பெருமாள்வில்லை என்னும் சிற்றூரில் 25.12.1950 ஆம் ஆண்டு திரு. சந்தானம் – திருமதி. மரியா தம்பதியருக்கு பிறந்த மூன்றாவது மக்களில் இரண்டாவதாக பிறந்தவர். சிறுவயதிலிருந்தே இறையழைப்பை உணர்ந்து தம் வாழ்வை முழுவதுமாக இறைவனின் திருவுளத்திற்காக அர்ப்பணிக்கத் தீர்மானித்தார்.

அழைப்பை ஏற்ற இவர்கள் நம் சபையில் சேர்ந்து 1975–ஆம் ஆண்டு முதல் அர்ப்பண வாக்குறுதியையும் 1981–ம் ஆண்டு தனது இறுதி அர்ப்பண வாக்குறுதியையும் அளித்தவர். 2000–ஆம் ஆண்டு தமது வெள்ளி விழாவையும் 2025–ம் ஆண்டு தம் பொன்விழாவையும் கொண்டாடி மகிழ்ந்தவர்.

இவர் தம் பணியை வேப்பேரி, செயின்ட் லூயிஸ், குன்னூர் சென்னை ஜார்ஜ் டவுன், சவேரியர் குளம், புனித தோமையார் மலை உள்ளிட்ட பல்வேறு பணித்தளங்களில் ஜெபவாழ்வு, கல்விப்பணி, சமூகப்பணி மற்றும் மக்களோடு இணைந்த அர்ப்பணிப்பு வாழ்வின் மூலம் இறையாட்சியின் விழுமியங்களை எடுத்துரைத்தார். எளிமையும், அமைதியும் அவரது வாழ்வின் அடையாளங்களாக இருந்தன. அனைவரையும் அன்போடு அணுகும் பண்பும், ஏழை எளியோரின் துயரங்களைத் தம் துயரமாக ஏற்று உதவும் மனமும் இறைவனின் சித்தத்திற்கு முழமையாக தம்மை ஒப்புக் கொடுக்கும் விசுவாசமும், அவரது வாழ்வை ஒளிரச் செய்தன. உடன் அருட்சகோதரிகளுக்கும், இறைமக்களுக்கும் அவருடன் பணியாற்றிய அனைவருக்கும் அவர் ஒரு சிறந்த சாட்சியாக திகழ்ந்தார்.

நமது அன்பிற்குரிய அருட்சகோதரி மரியா டெல்கி லில்லி அவர்கள் தமது வாழ்வுப் பயணத்தை நிறைவு செய்து ஆண்டவரின் நித்திய இல்லத்தில் இளைப்பாற அழைக்கப்பட்டுள்ளார். அவரது ஆன்மா இறைவனின் நித்திய மகிமையில் பங்குபெற நாம் தொடர்ந்து செபிப்போம்.




*Dear Sisters!*
*May the Lord bless you with joy, strength and abundant blessings in your mission.*

# JULY 2026

| | |
|---|---|
| 1st | Sr. Amalorpava Mary .M<br>Sr. Rajeshwari Pradhan<br>Sr. Saindri Digal |
| 2nd | Sr. Maria Selvi A.<br>Sr. Alambari<br>Sr. Akalya |
| 3rd | Sr. Jancy Rani .A<br>Sr. Gnana Soundarai |
| 5th | Sr. Shantha Mary<br>Sr. Fathima Maduram |
| 7th | Sr .Nalini Pradhan |
| 8th | Sr. Mary Celine A. |
| 10th | Sr. Leema Mary Stella |
| 11th | Sr. Kumari Fell<br>Sr. Shirley T.P.<br>Sr. Carmel<br>Sr. Maria Stella Sandra<br>Sr. Fathima Mary |
| 12th | Sr. Sagaya Mary Rayappan<br>Sr. Mary Clara |
| 13th | Sr. Mary Flora<br>Sr. S. Sammanusa Mary |
| 15th | Sr. Christy J. |
| 16th | Sr. Antony James Sheeba |
| 17th | Sr. Scholastica Mary<br>Sr. Amali Swaminathan |
| 18th | Sr. Louisal Susai Pillai<br>Sr. Iswarya Anto Joy |
| 19th | Sr. Judith Stianislaus<br>Sr. Pushpa Rakkini<br>Sr. Avila Theresa Mary |
| 21st | Sr. A. Sagaya Mary<br>Sr. Arockia Mary Arputha<br>Sr. Hasina Digal |
| 23rd | Sr. Isabella Mary .G<br>Sr. Madalene Lazar<br>Sr. Elizabeth Rani I.<br>Sr. A. Margaret |
| 25th | Sr. Hilda Juliet<br>Sr. James Metilda |
| 26th | Sr. Antoniammal Savarimuthu |
| 27th | Sr. Jaya Mary A.<br>Sr. Yashoda Digal |
| 28th | Sr. Philomina Arockiasamy<br>Sr. Jecintha Mary<br>Sr. Benedicta Epsy<br>Sr. Celine Devasagayam<br>Sr. D. Swetha |
| 30th | Sr. Alphonse Fernando<br>Sr. G Mary Celine |
| 31st | Sr. Sheela Prem Kumari |



*Be Happy & Stay Blessed!*



# Beloved Sisters...
# Departed in Christ....

| | |
|---|---|
| Sr. Mary Little Flower (S.G.IX) | 01.07.2010 |
| Sr. Mary Andrew | 02.07.1984 |
| Sr. Mary Stanislaus | 04.07.1998 |
| Sr. Mary Emmanuel | 04.07.2018 |
| Sr. Mary Regina | 07.07.1977 |
| Sr. Mary Metilda (S.G.XII) | 07.07.2014 |
| Sr. Mary Ursula | 09.07.1986 |
| Sr. Mary Melanie | 10.07.1991 |
| Sr. Mary Patricia | 11.07.2005 |
| Sr. Mary Zita | 14.07.2008 |
| Sr. Mary Cordula | 16.07.2000 |
| Sr. Mary Sylvia | 18.07.2023 |
| Sr. Mary Monica | 21.07.2022 |
| Sr. Mary Bosco | 22.07.1988 |
| Sr. Baby Ruffina | 26.07.2022 |
| Sr. Mary Felicita | 27.07.2020 |
| Sr. Queen Mary | 27.07.2024 |
| Sr. Mary Anne | 31.07.1953 |
| Sr. Mary Sabina | 31.07.1986 |
| Sr. Mary Concilia | 31.07.1998 |

*May their souls rest in Peace*

# சமூக தொடர்பு பணிக்குழு

***வேண்டுகோள்!***



**“உறவே நீ பேசு”** என்ற மாத இதழ் வெற்றிகரமாக 83 இதழ்களை தந்திருக்கின்றது. உங்கள் அனைவரின் மேலான ஒத்துழைப்புக்கு நன்றியும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம். தொடர்ந்து நம் சபையின் இந்த இதழ் சிறப்புற அமையவும், மேலும் பல செய்திகளைத் தாங்கிவர - மாநில வாரியாக ஒவ்வொரு பணிக்குழுவின் திட்டவரையறைகள், செயல்பாடுகள் மற்றும் அறிவிப்புக்கள், பாராட்டுகள், புத்தகம் மற்றும் பாடல் வெளியீடுகள், பணி ஓய்வு விழா, மாநிலத்தலைவிகளின் மாதாந்திரப் பயணத்திட்டங்கள் அடங்கிய தொகுப்புகள் இவற்றை ஒவ்வொரு மாதமும் 20-ம் தேதிக்குள் அனுப்பித்தருமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம். மற்றும் முக்கியமான நிகழ்வுகளின் புகைப்படங்கள் அனுப்பும்போது JPEG Format-ல் அனுப்பவும்.

## புனித தோமையார் பெருவிழா
## நல்வாழ்த்துக்கள்

**குறிப்பு:**

*உங்கள் பகிர்வுகள் மற்றும் பணிக்குழுக்களின் செயல்பாடுகளை கீழ்காணும் மின்னஞ்சலுக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.*

**Email: communicationfsj2022@gmail.com**



**Dr. Sr. Mary Jenova fsj**
*General Councilor*
*Communication Commission*

# Seminar for Microcredits Students








கார்மேல் மாதாவே, எங்கள் வாழ்வின் வழிகாட்டியே,
உங்கள் அருளால் எங்கள் பாதைகள் ஒளிரட்டும்.